
பாதுகாப்பாக இருங்கள்


# இணையவழி ஆள்மாறாட்ட மோசடிகள்



அரசாங்க அதிகாரிகள் அல்லது வங்கிகள், கடனட்டை நிறுவனங்கள் அல்லது பிற நன்கு அறியப்பட்ட மற்றும் நம்பகமான நிறுவனங்களின் பிரதிநிதிகள் போன்ற போலி அடையாளங்கள் மூலம் நிகழும் மோசடி. மோசடி செய்பவர்கள் சமூக ஊடகக் கணக்குகளில் ஊடுருவி அல்லது போலியான சமூக ஊடகக் கணக்குகளைப் பயன்படுத்தி, குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரைப் போலவும் நடிக்கலாம்.

## இது எப்படி நிகழ்கிறது?





- மோசடி செய்பவர்கள் உங்கள் நம்பிக்கையைப் பெற்ற பிறகு, உங்கள் அடையாள அட்டை எண், இணையம்வழி வங்கிப் பரிவர்த்தனைக்கான உள்நுழைவு விவரங்கள் அல்லது ஒரு-முறை கடவுச்சொல் (OTP) போன்ற தனிப்பட்ட தகவல்களை உங்களிடம் கேட்பார்கள்.
- உங்கள் கணக்குகளை அணுகுவது, மோசடி செய்து பொருட்களை வாங்குவது மற்றும் ஆள்மாறாட்டம் செய்வது அல்லது உங்களை மிரட்டிப் பணம் பறிப்பது ஆகியவையே அவர்களின் நோக்கமாகும்.
- பணப் பரிமாற்றம் செய்யுமாறும் கூட அவர்கள் உங்களுக்கு அழுத்தம் கொடுக்கலாம்.
- மோசடி செய்பவர்கள் உங்களின் தனிப்பட்ட தரவைப் பெறுவதற்கு அல்லது உங்கள் சாதனத்தைத் தொலைவிலிருந்து கட்டுப்படுத்துவதற்கு உங்கள் சாதனத்தில் தீம்பொருள் (மால்வேர்) மற்றும் வைரஸ்கள் (நச்சு நிரல்கள்) அல்லது தொலைநிலை மேசைக்கணினி செயலிகளையும் கூட திருட்டுத்தனமாக நிறுவலாம்.
- அவர்கள் இதைப் பெரும்பாலும் சந்தேகத்திற்கிடமான இணைப்புகளைக் கிளிக் செய்வதன் மூலம் அல்லது கோப்பு இணைப்புகளைப் பதிவிறக்குவதன் மூலம் செய்கிறார்கள்.

## நான் எதற்காக இதைத் தெரிந்துகொள்ள வேண்டும்?




- கோவிட்-19 கிருமித்தொற்று பரவலின் போது, மோசடி செய்பவர்கள் சுகாதார அமைச்சு அல்லது நிதி அமைச்சு அதிகாரிகளைப் போலத் தங்களைக் காட்டிக்கொள்வது போன்ற புது வகையிலான ஆள்மாறாட்ட மோசடிகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். அவர்கள் தங்களைத் தொடர்புத் தடமறிபவர்களாகக் காட்டிக்கொண்டும் மக்களின் தனிப்பட்ட தகவல்களை ஏமாற்றிப் பெறுகின்றனர்.
- சிங்கப்பூரில் 2019 ஜனவரி முதல் நவம்பர் வரை ஆள்மாறாட்ட மோசடிகளால் பாதிக்கப்பட்டவர்கள் குறைந்தது $38 மில்லியன் தொகையை ஏமாந்துள்ளனர் (CNA-இன் தகவல் அடிப்படையில்).


# இணையவழி ஆள்மாறாட்ட மோசடியை நான் எவ்வாறு அடையாளம் கண்டறிவது?



## கவனமுடன் ஆராய வேண்டிய வேண்டிய சில விஷயங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன!




- மோசடி செய்பவர்கள் உங்கள் நம்பிக்கையைப் பெறுவதற்குப் பெரும்பாலும் அரசாங்க அதிகாரிகளாக ஆள்மாறாட்டம் செய்கிறார்கள்.
- உங்கள் வங்கி கணக்கில் திடீர் பிரச்சனைகள், தொலைபேசி சந்தா அல்லது ஒரு பார்சல் டெலிவரியில் சிக்கல் இருப்பதாகக் கூறி அவர்கள் தொலைத்தொடர்பு, வங்கிகள் அல்லது கூரியர் நிறுவனங்களைப் போலவும் ஆள்மாறாட்டம் செய்யலாம்.
- மின்னஞ்சல் அல்லது செய்திகள் மூலம் தனிப்பட்ட விவரங்கள் போன்ற முக்கியமான தகவல்களைக் கேட்கும் அரசாங்க அதிகாரிகள் அல்லது பெருநிறுவனத்தின் பிரதிநிதிகளிடமிருந்து நீங்கள் கோரிக்கைகளைப் பெற்றால் எச்சரிக்கையாக இருங்கள்.




- மோசடி செய்பவர்கள் உங்கள் நண்பர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களின் சமூக ஊடகக் கணக்குகளில் ஊடுருவி, உங்களிடம் தகவல் அல்லது பணம் கேட்க அவற்றைப் பயன்படுத்தலாம்.
- உங்கள் நண்பரோ அல்லது குடும்ப உறுப்பினரோ சமூக ஊடகங்களில் அசாதாரணமான முறையில் கோரிக்கைகளை விடுத்தால் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




- மோசடி செய்பவர்கள் உங்களுக்கு அபராதம், சட்டச் செலவுகள், சேவையை இரத்து செய்தல் அல்லது நீங்கள் இணங்கவில்லை என்றால் கைது செய்வது போன்ற அச்சுறுத்தலான சூழ்நிலையில் உங்களை நிறுத்த முயற்சி செய்வார்கள்.
- விரைவான முடிவை எடுக்க அல்லது தனிப்பட்ட தகவல்களைக் கைவிடுமாறு உங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டால் எச்சரிக்கையாக இருங்கள்.

## உங்களுக்கு மோசடி தொடர்பான ஆலோசனை தேவையா?

மோசடி எதிர்ப்பு உதவித் தொலைபேசி எண் 1800-722-6688 -ஐ அழைக்கவும்


1 CLICK AWAY
MEDIA LITERACY COUNCIL

#பாதுகாப்பாக இருங்கள்

கிளிக் செய்வதற்கு முன்னர் சரிபார்க்கவும்

ஆதரவளித்தவர்:
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
SINGAPORE POLICE FORCE
NATIONAL CRIME PREVENTION COUNCIL
SINDA
இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!

# இணையவழி ஆள்மாறாட்ட மோசடிக்கு எதிராக என்னை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?



**இணையம் வழியாக மற்றவர்களுடன் ஈடுபடும் போது உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்வதற்கான சில வழிகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன!**


- உங்கள் வங்கி விவரங்கள் அல்லது கடவுச்சீட்டு எண்கள் போன்ற முக்கியமான தகவல்களை தெரிவிக்க வேண்டாம்.
- அரசாங்க அமைப்போ அல்லது நம்பகமான வணிக நிறுவனமோ ஒருபோதும் தொலைபேசியிலோ அல்லது சமூகச் செய்தி அனுப்பும் செயலிகள் மூலமோ இதுபோன்ற தகவல்களை உங்களிடம் கேட்க மாட்டார்கள்.






- பரிசு அட்டைகள், ப்ரீபெய்டு அட்டைகள், வங்கியிடைப் பணமாற்றீடுகள் (வயர் டிரான்ஸ்ஃபர்) அல்லது பிட்காயின் போன்ற அசாதாரண முறைகள் மூலம் பணம் செலுத்துவதற்கான கோரிக்கைகளில் எச்சரிக்கையாக இருங்கள்.
- இணைப்புகளைப் பதிவிறக்கச் சொல்கின்ற அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டாம் அல்லது மூலத்தைச் சரிபார்க்கும் முன் இணைப்புகளைக் கிளிக் செய்ய வேண்டாம்.
- உங்கள் சாதனங்களுக்கு நிறுவனத்தின் அல்லது அமைப்பின் அதிகாரப்பூர்வ பிரதிநிதி என்று நிரூபிக்கப்படாத வரை, யாருக்கும் தொலைநிலை அணுகலை வழங்க வேண்டாம்.

- ஏதேனும் சமயத்தில் அழைப்பின் தன்மை அல்லது அழைப்பாளரின் அடையாளம் குறித்து உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால், எல்லா தகவல்தொடர்புகளையும் நிறுத்திவிட்டு, மூலம் நம்பகமானதா என்று சரிபார்க்கவும்.
- நீங்கள் அழுத்தம் கொடுக்கப்படுவதாக அல்லது விரைவான முடிவை எடுக்க அவசரப்படுத்தப்படுவதாக உணர்ந்தால் அழைப்பாளரின் கோரிக்கைகளுக்கு அடிபணிய வேண்டாம்.
- நிறுவனத்தின் அல்லது வணிகத்தின் பிரதான தொலைபேசி எண்ணை அழைப்பதன் மூலம் அக்கோரிக்கையைச் சரிபார்க்கவும்.




**நீங்கள் ஆள்மாறாட்டம் மோசடியில் சிக்கிக் கொண்டுள்ளதாக நினைக்கிறீர்களா?**

அவசரக் காவல்துறை உதவிக்கு, 999 என்ற எண்ணை அழைக்கவும்

#பாதுகாப்பாக இருங்கள்

கிளிக் செய்வதற்கு முன்னர் சரிபார்க்கவும்

1 CLICK AWAY
Be Safe · Be Smart · Be Kind
MEDIA LITERACY COUNCIL
ஆதரவளித்தவர்:
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
SINGAPORE POLICE FORCE
NATIONAL CRIME PREVENTION COUNCIL
SINDA Singapore Indian Development Association
இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!